மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.10/2012

2024–ம் ஆண்டு மார்ச் திங்கள் 22–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஹென்றி (Pw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.22.04.2024</u>
<u>வா.சா.1</u>
<u>குறுக்கு விசாரணை:–</u>

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பெயரில் உள்ள பட்டாவை மாற்றிவிட்டார்கள் அதனை ரத்து செய்ய கோரியுள்ளேன். எனது சொத்தின் பட்டா எண் என்னவென்றால் 1553 ஆகும். சர்வே எண்.471/1A2 ஆகும். எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 ஏக்கருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது பெயரில் உள்ள 1553 பட்டாவை கடந்த 15.05.2000 ம் தேதி இராமேஸ்வரம் வட்டாட்சியர் ரத்து செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல்ல் செய்துள்ள வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4, ஆவணங்கள் 1987 ல் கொடுக்கப்பட்ட ரசீதுகள், 1985 ல் கொடுக்கப்பட்ட பட்டா, 1985 ல் கொடுக்கப்பட்ட மெமோ என்றால் சரிதான். தாவா சொத்தின் தற்போதைய சர்வே எண்.471/8. சர்வே எண்.471/8 க்கு எனது பெயரில் எந்த பட்டாவும் இல்லை என்றால் சரிதான். நான் கடந்த 23.10.2009 ம் தேதி 3 ம் பிரதிவாதிக்கு 1 ஏக்கர் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை அது கிரைய ரத்து பத்திரம். வா.சா.ஆ.7 ஆவணம் நான் 3 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரையப் பத்திரம் என்றால் நான் கொடுக்கவில்லை கொடுத்ததாக எழுதிவாங்கியுள்ளார். நான் கொடுக்காததை 3 ம் பிரதிவாதி எழுதி வாங்கியது எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் 2009 ல் தெரிய வந்தது. 3 ம் பிரதிவாதி ஏமாற்றி எழுதி வாங்கிவிட்டார் அவர் பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரையம் பத்திரத்தில் கண்ட நான்குமாலில் இருதயராஜ் வின்சென்ட் ஆகியோர் நிலத்திற்கும் தெற்கே என்று காண்பித்துதான் கிரையம்

கொடுத்துள்ளேன் என்றால் எழுதி கொடுத்தபின்பு தான் என்னை கையெழுத்து போடச்சொன்னார்கள். சர்வே எண்.471ல் கண்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 50 ஏக்கர் 30 செண்ட் ஆகும். நான் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சுவக்கின் அந்தோணியம்மாள் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினேன். சுவக்கின் அந்தோணியம்மாளும், சந்தியா மகன் அந்தோணி பிச்சை ஆகியோர் பங்காளிகள் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சுவக்கின் அந்தோணியம்மாளுக்கு எந்த பாகம் என்று பிரிக்கப்படாத சொத்தில் தான் நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் சர்வே எண் 471 ல் கிரையம் வாங்குவதற்கு முன்பே 1, 2 பிரதிவாதிகளான வின்செண்ட் மச்சாது, இருதயராஜ் மச்சாது ஆகியோர் கிரையம் வாங்கிவிட்டார் என்றால் இல்லை எனக்கு பின்பு தான் கிரையம் வாங்கினார்கள். 1, 2 பிரதிவாதிகளிடம் இருந்து 5ம்பிரதிவாதியும், மரிய வில்பர்ட்டும் பவர் வாங்கியுள்ளார்களா என்றால் சரிதான். மரிய வில்பர்ட் எனது தங்கச்சியின் கணவர் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியும், மரிய வில்பர்ட்டும் சேர்ந்து தான் வழக்கில் 8 முதல் 14 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் எனது மைத்துனர் என்பதால் மரிய வில்பர்ட்டை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு எனது கிரையப் பத்திரப்படி சர்வே எண்.471/1A1A2ல் 1 ஏக்கர் 76 செண்ட் மட்டுமே பாத்தியம் என்றால் சரியல்ல. அந்த 1 ஏக்கர் 76 செண்ட்டில் 1 ஏக்கரை 3ம் பிரதிவாதி எத்தேபாதருக்கு 2009ல் கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.7 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எத்தேபாதருக்கு கொடுத்த கிரைய ஆவணத்தில் வடக்கு பக்கம் வின்செண்ட், இருதயராஜ் இடம் என்று குறிப்பிட்டு விட்டு தற்போது இல்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்ணில் வடக்கு பக்கம் வின்செண்ட், இருதயராஜ்க்கு மட்டும் பாத்தியப்பட்டது அதற்கு தெற்கே எனக்கு பாத்தியமான இடத்தில் 1 ஏக்கரை 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டேன், அதற்கு ஆக தெற்கே தான் மீதியுள்ள இடம் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் மொத்த சொத்தில் ஆக மேற்கு பக்கம் தான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் சந்தியாகப்பர் கோவிலுக்கு செல்லும்

தென்வடல் பாதைக்கும் கிழக்கே என்று நான்குமால் குறிப்பிட்டு தான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் சொத்தை அளந்தாரா என்றால் அளந்தார். கடந்த 03.03.2019 ம் தேதி நீதிமன்ற ஆணையர் அவர்கள் உபய தரப்பினர் முன்னிலையில் தாவா சொத்தை வருவாய் ஆவணங்கள் படி அளவீடு செய்தார்கள். அதில் மேற்படி சர்வே எண்.471 ல் கிழக்கு பக்கம் லேகா, டிட்டோ, ரூபிஸ்டன், பெர்னாட்ஷா, உமாபிரியா, காஞ்சனா ஆகியோர்கள் வீடு கட்டி வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் வீடு கட்டி வசித்து வரும் பகுதி கிழமேல் ரோட்டிற்கு வடக்கே வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஒருபோதும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியமானது இல்லை என்றாலும், தாவா சொத்தில் பிரதிவாதிகளால் அவரவரால் கிரையம் வாங்கிய இடத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அனுபவத்தில் இல்லாத சொத்தை அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.